முற்பகல் 11-55

24-5-2006 ஆம் ஆண்டு மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில், பக்கம் 25-ல், சட்டமன்ற மேலவையைக் கொண்டு வருவதற்குத் தேவையான அரசியல் சட்டத் திருத்தம் செய்ய இவ்வரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலவையைக் கொண்டு வந்தால் மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மலரவன், உங்களுக்கு 20 நிமிடங்கள் கொடுத்து, 25 நிமிடங்கள் பேசி இருக்கிறீர்கள். உட்காருங்கள். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

திரு. தா. மலரவன்: இந்த ஆட்சியில் எல்லாம் அறிவிப்பிலேயேதான். . . (குறுக்கீடு)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர்கள் திரு. கோ. அரி மற்றும் திரு. வி.பி. கலைராஜன் ஆகியோர் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அனுமதி வேண்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள், திரு. செங்கோட்டையன். (குறுக்கீடு) அவர் முடித்துவிட்டார். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அவர் முடித்தாகிவிட்டது. நீங்கள் பேசுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் சபையிலே திரு. அரி மற்றும் திரு. கலைராஜன் ஆகிய இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களைக் கூட்டத் தொடர் முழுவதும் வெளியேற்றியதை மறுபரிசீலனை செய்து, நாளையிலிருந்து அவர்கள் கடமைகளை ஆற்றுவதற்கு சட்டமன்றத்திலே நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்தி, அமர்கிறேன்.